பக்கங்கள்: 10 | விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 | வள்ளுவர் ஆண்டு 2052 | புரட்டாதி 31 | திங்கட்கிழமை | 18.10.2021 | கதிர் 347

### இது ரகசியம் அல்ல!

சுமந்திரனின் கடல் திருவிழா நேற்று முடிவடைந்து விட்டது. இன்று வயல் திருவிழா. நேற்றிலும் விட இன்று மக்கள் பங்களிப்பு அதிகமாக இருக்கக்கூடும். ஆனால் ஒரே சமயத்தில் பரவலாகப் பல இடங்களில் நடப்பதால் மக்கள் பங்களிப்பை பக்கம்02

# முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரையான கடல் வழிப் போராட்டம் வெற்றிகரமாக நிறைவடைவு





(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக் கோரி முல்லைத்தீவில் ஆரம்பித்த கடல் வழியான மாபெரும் பேரணி வெற்றிகரமாகப் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.


முல்லைத்தீவு - கள்ளப்பாடு கடற்கரையில் நேற்றுக் காலை 7.15 மணியளவில் கடல் வழியாகப் படகுகளில் ஆரம்பித்த பேரணி யாழ்., பருத்தித்துறை துறைமுகத்தை காலை 10 மணியளவில் வந்தடைந்தது. 2

## 12 பேர் மரணம்



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 12 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2

## 578 பேருக்கு கொரோனா



இலங்கையில் நேற்று 578 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2

# விவசாயிகளின் பிரச்சினைக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் இன்று பெரும் போராட்டம்

### சகல கமநல சேவைகள் மையங்களுக்கூடாக ஏற்பாடு

விவசாயிகள் எதிர்நோக்கும் தற்காலப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி வடக்கு, கிழக்கில் இன்று கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்காக இன்றைய போராட்டத்தில் பங்கேற்று விண்ணதிரக் குரல் கொடுப்போம் என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள உரம் மற்றும் கிருமி நாசினி பற்றாக்குறை விவசாயிகளையும் தோட்டத்தொழிலையும் மிக மோசமாகப் பாதித்திருக்கின்றது. வடக்கிலும் கிழக்கிலும் பெரும்போக நெற் பயிர்ச்செய்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. ஓரிரு வாரங்களுக்குள் பசளை மற்றும் கிருமி நாசினி அத்தியாவசியமாக தேவைப்படும். இந்தத் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்யுமாறு கோரி வடக்கு, கிழக்கிலுள்ள சகல கமநல சேவைகள் மையங்களுக்கூடாக இன்று காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. 2



# நிரந்தர தீர்வை கோட்டா வழங்கினால் தமிழர்களின் மனதை வெல்ல முடியும்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறிவுரை



நாட்டின் தேசிய பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தர தீர்வை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொண்டுவந்தால்தான் இங்குள்ள ஒட்டுமொத்த தமிழர்களின் மனதையும் அவரால் வெல்ல முடியும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். 2

# மஹிந்தானந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. கண்டி - கலகெதரயில் 10



## இரண்டு மாத சிசு திடீரென மரணம்

பிறந்து இரண்டு மாதங்களேயான ஆண் சிசு உயிரிழந்துள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தகவல்கள் தெரிவித்தன.

வட்டுகோட்டை, அராலி தெற்கைச் சேர்ந்த சிசு நேற்று அதிகாலை 3 மணியளவில் தாய்ப்பால் 2

## ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு உரிய தண்டனை கட்டாயம் வழங்கப்படவேண்டும்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டமையால் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் 2



## தனியார் வகுப்புகளை ஆரம்பிக்கத் திட்டம்

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் தனியார் மேலதிக வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய, அதற்கான அனுமதியை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சர் 2

## இனி இது .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அளவீடு செய்வது கஷ்டமாக இருக்கலாம். நேற்றைய நிகழ்வுக்கு மாவை சேனாதி ராசா வரவில்லை. சுகவீனம் என்று காரணம் கூறப்பட்டது. தொண்டை நோவும், விட்டு விட்டுக் காய்ச்சலும் என்று நெருங்கியவர்களிடம் கூறினார் என அறிய வந்தது. அவரது வயதுக்கு எதற்கும் ஒரு தடவை பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொள்வது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருக்கும். செய்தாரோ தெரியவில்லை.

நேற்றைய கடல் பவனிக்கு யாழ்ப்பாண நகர மேயர் வி.மணிவண்ணனின் ஆதரவு உண்டு என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அவர் கடல் பவனிப் பக்கம் தலைகாட்டவில்லை. காரணங்கள் உண்டு. எனினும் போராட்டத்தை ஏற்பாடு செய்த சுமந்திரன் தரப்புக்குத் தெரியப்படுத்தக் கூடியதாக தமது ஆதரவாளர்களை - ஆள்களை - அவர் கடல்பவனிக்கு சத்தம் சந்தடியின்றி அனுப்பி வைத்தார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

அப்படி அவர் நடந்து கொண்டமைக்கு காரணங்கள் உண்டு.

ஒன்று அவரது குடும்ப நிகழ்வு ஒன்று இன்று உண்டு. அதற்கான ஆயத்தங்களுக்கு மத்தியில் நேற்றுக் கடலில் பயணிக்கும் நிலையில் அவர் இல்லை. சுமந்திரன் தரப்பும் அதைப் புரிந்து கொள்ளும்.

அடுத்து - மிக முக்கியமான காரணம். இந்த வருட இறுதிக்குள் யாழ் மாநகராட்சி மன்றத்தில் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை அவர் நிறைவேற்றியாக வேண்டும். ஏற்கனவே இவ்வாண்டு முற்பகுதியில் தொத்துப் பொறியில்தான் அவரால் மேயராக முடிந்தது.

இன்றைய நிலையில் அவர் தாமாகப் பதவியை இராஜினமாச் செய்வார் எனின், அத்தோடு தற்போதைய மாநகர சபை கலைந்து விடும்.

மாறாக, மேயர் சமர்ப்பிக்கும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு, அதனால் அவர் பதவி இழப்பாராயின், தற்போதைய சபையின் பதவிக் காலம் முடியும் வரையான எஞ்சிய ஐந்து, ஆறு மாதக் காலத்துக்கு புதிய மேயர் அங்கத்தவர்களிடையே நடக்கும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவார்.

ஆக, மேயர் பதவியில் மணிவண்ணன் பதவியில் தொடர்வதானால் ஆண்டு இறுதியில் நடக்கும் வரவு - செலவுத் திட்ட வாக்களிப்பில் அவர் வெற்றி பெற வேண்டும்.

ஏற்கனவே இவ்வாண்டு முற்பகுதியில் நடந்த மேயர் தெரிவில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் மேயர் பதவியைப் பறிகொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மேயர் மணிவண்ணனை வீழ்த்தி, அந்தப் பதவியை மீளக் கைப்பற்றக் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது.

இந்தச் சமயத்தில் -

சுமந்திரன் தரப்புக்குப் பகிரங்கமாக ஆதரவு காட்டி, அதன் காரணமாக மாநகர ராட்சி மன்றத்தில் தமக்குத் துணையாக இருக்கும் ஈ.பி.டி.பியின் ஆதரவை இழக்க அவர் விரும்பமாட்டார். ஈ.பி.டி.பி. தனது ஆதரவை விலக்குமானால் இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் தாம் தோற்று மேயர் பதவியையும் இழக்கும் நெருக்கடி ஆபத்தாகச் சூழ்ந்து நிற்கின்றது என்பது மணிவண்ணனுக்கு நன்கு தெரியும்.

அதனால் ஈ.பி.டி.பியை பகைத்துக் கொள்ளும் எந்தக் கைங்கரியத்திலும் இப்போதைக்கு இறங்குவதற்கு மேயர் மணிவண்ணன் தயாரில்லை.

அதுதான் இந்தப் பக்கமும் சாயாமல், அந்தப் பக்கமும் சாயாமல் அம்சக்காக - சமாளித்து - காய் நகர்த்துகின்றார் அவர்.

இனிமேல் அவர் அப்படித்தான் நடக்க வேண்டியிருக்கும். ஏன் என்ற காரணத்தை நாளை சொல்லுகின்றேன்.

**********

நெருக்கமானவர்களின் திருமண வீட்டுக்குச் சென்றால் எனக்கு ஒரு பழக்கம் உண்டு. அதுவும் திருமண மாப்பிள்ளை கொஞ்சம் நெருக்கமானவர், நண்பர், நட்புரிமையோடு பழகக் கூடியவர் என்றால், என் குதூகலம் இரண்டு மடங்காகி விடும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் மணமக்களை வாழ்த்தும்போது மணமகனின் காதில் மட்டும் கேட்கக் கூடியதாக ஒரு - இரகசியத்தை - விடயத்தை - கூறுவேன். அதை செவிமடுத்ததும் மாப்பிள்ளை ஒரு கணம் வெலவெலத்துப் போவார். அப்படி நான் என்னதான் அவருக்கு - மாப்பிள்ளைக்கு - தனியாக, கமுக்கமாகக் கூறுவேன் என்று நினைக்கின்றீர்கள்....?

"என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்!" - என்பேன் நான். மாப்பிள்ளை திடுக்குற்றுப் போவார். பலரின் வாழ்த்துகளுக்கு மத்தியில் என் அனுதாபம் தெரிவிப்பு அவருக்கு அதிர்ச்சியைத் தராமல் வேறு என்ன செய்யும்?

"என் அனுபவத்தைப் பகிர்ந்தேன்." - என்று கூறி, கைகொடுத்து விட்டு அகல்வேன்.

ஓரிரண்டு மாதங்கள் கழித்து வழியில் மாப்பிள்ளை என்னைக் கண்டால் வழி மறிப்பார். "அண்ணன் அன்று திருமண வீட்டில் உண்மை பேசியவர் நீங்கள் ஒருவர் மட்டும்தான்!" என்று ஒரு கிண்டல் பாணியில் என்னிடம் உண்மையை ஒப்புக் கொண்டு போவார் அவர்.

சரி, இந்தக் கதை இன்று ஏன் என்று கேட்கின்றீர்களா? காரணம் உண்டு.

நம்மில் ஓர் அரசியல்வாதி இன்று சட்டரீதியாகத் தமது தனித்துவச் சுதந்திரத்தை இழக்கின்றார். பாவம் பையன். அதிக சுதந்திரத்துடன் ஒழித்திரிந்தவர். அது இன்றுடன் பறிபோகின்றது. அதை விளக்கத்தான் இந்தக் கதை.

எது, எப்படியென்றாலும், அவருக்கு எம் வாழ்த்துக்கள். மணி மணியாய்ப் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ எங்கள் வாழ்த்துக்கள்.

- மின்னல் -

## முல்லைத்தீவில் இருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இழுவைமடி மீன்பிடி முறைமை, கடற்தொழில் மற்றும் நீரியல் வள சட்டத்தின் கீழ் 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டதிருத்தத்தின் பின்னர் முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தாலும் அது நடைமுறையில் இன்னமும் முழுமையாக செயற்படுத்தப்படாதுள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் றோலர் மீன்பிடி முறைமையின் காரணமாக வடக்கு மீனவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்களுக்கு நீதிகோரி கடல் வழியாக இந்தக் கண்டனப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய போராட்டத்தில் கடற்றொழிலாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளில் கலந்துகொண்டனர்.

## ஈஸ்டர் தாக்குதலுடன் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது ஆட்சிக் காலப்பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டதால், அது எனக்கு மிகவும் வருத்தத்தை அளிக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையோருக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். கத்தோலிக்க மக்களுக்கு நாம் மதிப்பும், கௌரவமும் வழங்கி வருகின்றோம் - என்றார்.

## விவசாயிகளின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்று காரணமாக சமூக இடைவெளிகளைப் பேணி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும். பல இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நிரந்தர தீர்வை கோட்டா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசமைப்பு மற்றும் தமிழர்சார் விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுடன் எந்த நேரமும் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால், அந்தப் பேச்சுக்கான அழைப்பு அவரிடமிருந்து இன்னமும் வரவில்லை.

இந்நிலையில், இம்மாத இறுதியில் வெளிநாடு செல்லும் ஜனாதிபதி, அடுத்த மாத முற்குதியில் நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களைச் சந்திப்பார் என்று வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் பீரிஸ் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார். எனினும், இது தொடர்பில் உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து எமக்கு இதுவரை வரவில்லை. அப்படி ஒரு அழைப்பு வந்தால் வரவேற்கத்தக்கது.

சர்வதேசத்தின் மனதை ஜனாதிபதி வெல்ல வேண்டுமெனில் முதலில் நாட்டிலுள்ள தமிழர்களின் மனதை அவர் வெல்ல வேண்டும். நாட்டின் தேசிய பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தர தீர்வை ஜனாதிபதி கொண்டுவந்தால்தான் இங்குள்ள ஒட்டுமொத்த தமிழர்களின் மனதையும் அவரால் வெல்ல முடியும் - என்றார்.

## இரண்டு மாத சிசு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொடுத்தபின் சில நிமிடங்களில் மயக்கமடைந்துள்ளது.

சிசு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டது.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் சிகிச்சை பயனின்றி சிசு உயிரிழந்தது என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## தனியார் வகுப்புகளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்பட்டது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார கூறினார்.

## 12 பேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 484 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 12 பேரில் 8 ஆண்களும், 4 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 6 ஆண்கள், 3 பெண்கள் என 9 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இரண்டு ஆண்கள், பெண் ஒருவர் என 3 பேர் 30 -59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

## 578 பேருக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 31 ஆயிரத்து 648 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் நாட்டில் மேலும் 316 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 92 ஆயிரத்து 621 ஆக அதிகரித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாடு செல்லும் பெண்கள், அவர்களது பிள்ளைகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது அரசாங்கம்!

## பெண்களின் சுதந்திரம் தொடர்பான தேசிய இயக்கம் கருத்து

வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்கள் மற்றும் 5 வயதிற்குமேற்பட்ட பிள்ளைகளையுடைய தாய்மார்களால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அதன்காரணமாக வெளிநாடு செல்லும் பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது என்று பெண்களின் சுதந்திரம் தொடர்பான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

டொலர்களைச் சம்பாதிப்பதற்காகப் பெண்களைவெளிநாடுகளுக்குஅனுப்பிவைக்கும் ஆட்சியாளர்கள், அந்தப் பெண்களின்பாதுகாப்பைஉறுதிப்படுத்துவதற்குத் தவறியமையால் பலர் சவப்பெட்டிகளிலேயே மீண்டும் நாடு திரும்புகின்றார்கள்.

வருடாந்தம் நாட்டுக்குப் பெருமளவான வருமானத்தை ஈட்டித்தரும் பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்வதற்கு ஆட்சியாளர்கள் தவறியிருக்கின்றார்கள் என்றும் அந்த இயக்கத்தின் உறுப்பினர் சித்தாரா குலரத்ன தெரிவித்துள்ளார்.

டொலர்களைச் சம்பாதிப்பதற்காகப் பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு அனுப்புதல் தொடர்பாக அரசாங்கத்தால்மேற்கொள்ளப்பட்டுள்ள முறையற்ற தீர்மானம் தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் முன்னிலை சோசலிசக் கட்சியின் பெண்கள் இயக்கத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கு எமது அமைப்பால் தொடர்ச்சியாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றபோதிலும், அவற்றுக்குரிய தீர்வை வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பிற்காகச் செல்லும் பெண்களில் 5 வயதுக்கும் மேற்பட்ட குழந்தைகளையுடைய தாய்மார் தொடர்பில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கட்டுப்பாடுகளை எளிதாக்குவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அத்தகைய தாய்மார் பொதுவாக தமது பிள்ளையை உரியவாறு பாதுகாப்பாகக் கவனித்துக்கொள்ளக் கூடிய உறவினர்களுக்கான தேவைப்பாட்டைக் கொண்டிருப்பர்.

அதுமாத்திரமன்றி பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் கிராமசேவை அலுவலர், பிராந்திய செயலாளர் மற்றும் அரச முகவர் நிலையங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், குறித்த பெண்களின் பிள்ளைகள் தொடர்பில் பொறுப்புக் கூறக்கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் தற்போது வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கும் பெண்களின் விண்ணப்பப்படிவங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஒன்லைன் மூலம் கையேற்க ஆரம்பித்திருக்கின்றது. இவ்வாறான பின்னணியில் வெளிநாடு செல்லும் தாய்மாரின் பிள்ளைகள் தொடர்பில் அரசின் பொறுப்பு நீக்கப்பட்டு, அது வெறுமனே வாய்மூல உத்தரவாதத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்விளைவாக அந்தப் பிள்ளைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. வெளிநாடு செல்லும் பெண்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் வலுவானதாக இருக்கும்போதே அவர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள்என்பதுஅனைவரும் அறிந்த விடயமாகும். அவ்வாறிருக்கையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால் அவர்களது நிலையென்ன என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இலங்கையைச் சேர்ந்த பெருமளவான பெண்கள் மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றார்கள். அவர்கள் பணிபுரியும் இடங்களில் வன்முறைகளுக்கும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றமை பற்றியபலசெய்திகள்கடந்தகாலங்களில் வெளியாகியிருந்தன.

எனவே வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பையும் அவர்களது தொழில்சார் உரிமைகளையும் உறுதிப்படுத்துமாறு நாம் காலத்திற்குக்காலம் அரசாங்கத்திடமும் வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகத்திடமும் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்திருக்கின்றோம். இதுதொடர்பாகப் பரந்தளவிலான விழிப்புணர்வு செயற்திட்டங்களையும் முன்னெடுத்திருக்கின்றோம்.

அவ்வாறிருப்பினும்கூட இந்நாட்டின் ஆட்சியாளர்கள் டொலர்களை சம்பாதிப்பதற்காக பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கும்போது அவர்களது பிள்ளைகளுக்கு உரியவாறான பாதுகாப்பை வழங்குவதற்குத் தவறியிருக்கின்றார்கள் என்றே கருதுகின்றோம். குறிப்பாக பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பான கட்டுப்பாடுகள் வெறுமனே வாய்மூல உத்தரவாதமாகத் தளர்த்தப்பட்டமையைக் கடுமையாக எதிர்க்கின்றோம்.

தற்போதைய ஆட்சியாளர்களின் முட்டாள்தனமான தீர்மானங்களினால் டொலருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. வெளிநாட்டுப்பணியாளர்களாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் பெண்களால் இந்த நாடு வருடாந்தம் பெருமளவிலான டொலர்களை ஈட்டிக்கொள்கின்றது.

ஆனால் அவ்வாறு வருமானத்தை உழைத்துத்தரும் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளாததன் விளைவாக, அநேகமானோர் சவப்பெட்டிகளிலேயே மீண்டும் நாடு திரும்புகின்றனர்.

எனவே முதலில் வேலைவாய்ப்பிற்கான வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களுக்கு அவசியமான மொழி, சட்டம், தொழில் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பானபயிற்சிகளைவழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேவேளை அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்குப் பூர்த்திசெய்ய வேண்டிய கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, அவர்களின்பாதுகாப்பைக்கேள்விக்குள்ளாக்கும் வகையிலான அரசாங்கத்தின் செயற்பாட்டைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்தார்.

# 50 கோடி டொலர்களைக் கடனாக இந்தியாவிடமிருந்து இலங்கை பெறும்

நாட்டில் ஏற்படக்கூடிய எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் இந்தியாவிடமிருந்து 50 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக பெறுவதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது.

இதற்கான பேச்சுகள் இடம்பெற்றுள்ள நிலையில் இந்தியத் தரப்பு சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

கொவிட் தொற்று காரணமாக இலங்கையின் பொருளாதார மூலங்கள் அனைத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தேசிய வருவாய் மற்றும் அந்நிய செலாவணி இருப்பு என்பன வீழ்ச்சிகண்டுள்ளன.

இதனால் டொலரின் பெறுமதியில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு மற்றும் ரூபாவின் வீழ்ச்சி என்பன நேரடியாகவே இலங்கையின் இறக்குமதியைப் பாதித்தது.

இந்நிலையில், இலங்கையின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்குத் தேவையான மசகுஎண்ணெய்கொள்வனவும் கேள்விக்குறியானது. இதற்குப் பிரதான காரணம் நாட்டில் போதியளவு டொலர் இன்மையாகும்.

இவ்வாறானதொரு நிலையில் ஓமான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளிடமிருந்துகடன்அடிப்படையில் மசகு எண்ணெய் அல்லது சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கொள்வனவு செய்யும் நோக்கில் எரிச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில அந்நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன் போது இலங்கையின் எரிபொருள் விநியோக பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 360 கோடி டொலர் நிதியுதவியைப் பெறுவதற்கு ஓமான் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்பட்டது.

ஐந்து வருட சலுகை மற்றும் 20 வருடங்களில் குறித்த கடனை திருப்பிச் செலுத்தும் வகையிலுமே ஒப்பந்தம் அமையும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இன்று வரையில் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவுடனும் எரிபொருள் கொள்வனவிற்காக நிதியுதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் பேச்சுகளை முன்னெடுத்திருந்த நிலையில் இந்தியாவுடனான கலந்துரையாடல்களில் சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 50 கோடி அமெரிக்க டொலர்களை இந்தியா இலங்கைக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட்டால் மூடப்பட்ட பாடசாலைகளை ஆரம்பிக்க சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம்

கொரோனாத் தொற்றின் பின்னராக நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள ஆரம்ப நிலைக் கல்விக்கான பாடசாலைகளை ஆரம்பிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான நிகழ்வு உத்தியோகபூர்வமாக திருகோணமலை ஸ்ரீ சுமேதங்கர மகா வித்தியாலயம் மற்றும் மாதுமை அம்பாள் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் தற்போதைய நிலைமைகளை பார்வையிட்ட ஆளுநர், அரச அதிகாரிகளும் அதனை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கில் நேரில் சென்று பார்வையிட்டு சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏதுவான வகையில் பாடசாலைகளை சுத்தப்படுத்த அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம் என தெரிவித்த ஆளுநர், மாணவர்களது சுகாதாரத்தைக் கருத்தில்கொண்டு அதற்குதேவையானவழிவகைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

இதன்போது ஆரம்பக்கல்வி வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகளுக்கான உடல் வெப்பநிலை பரிசோதனை கருவிகள் பாடசாலையின் அதிபர்களுக்கு கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன, திருகோணமலை நகரசபை தலைவர் ராஜநாயகம், பட்டணமும் சூழலும் பிரதேசசபை தவிசாளர் ரத்னாயக்க மற்றும் பல அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.


Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழர்களின் அவல நிலை

யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசும், அதன் பிரதிநிதிகளும் தெரிவிக்கும் கருத்துக்கள் இந்த விவகாரத்தில் தமிழர்களின் மறவழி போராட்டத்தை – புலிகளின் ஆயுதம் தாங்கிய விடுதலை வேள்வியை – நியாயப்படுத்துவனவாக அமைந்திருப்பது கண்கூடு.

விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகள் கனன்ற போது – பீரங்கிகள் முழங்கிய போது – 'மல்டி பரல்கள்' விடாது அதிர்ந்த போது – ஈழத்தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையின் அவலக் குரல் இலங்கை அரசின் காதுகளில் மட்டுமல்லாமல், சர்வதேசத்தின் செவிப்பறைகளில் கூட ஓங்கி ஒலித்தது. இப்போது யுத்தச் சத்தங்களும் இல்லை, பேரிழப்புகளும், போரிழப்புக்களும் கூட இல்லை. அமானுஷ்ய அமைதியில் அடக்குமுறை கொடிகட்டிப் பறக்கின்றது. அதனால் தமிழர்தம் தேசிய இனப்பிரச்சினையும், அடக்குமுறைக்கு எதிராக அவர்கள் எழுப்பும் தீனக்குரலும் உலகின் காதுகளில் விழுவதாக இல்லை.

புலிகளும், அவர்களின் 'பயங்கரவாத' நடவடிக்கைகளுமே சமாதானத் தீர்வுக்கு முட்டுக்கட்டை என்று கூறிய சர்வதேசம், இப்போது நிலைமை மாறிய பின்னர், தமிழ் மக்களை அடியோடு கைவிட்டு, தான் சமாதானமாகி விட்டது. புலிகளின் சன்னங்கள் சீறிக் கொண்டிருந்தால் – யுத்தம் சன்னதம் கொண்டு கோரத் தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தால் – தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையும், தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளும் சர்வதேசத்தின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்குமோ என்னவோ? அது இருந்திருக்குமானால், சர்வதேசம் தமிழர் பிரச்சினையை இப்படி உதாசீனம் செய்து, புறக்கணித்து, இழுத்தடிக்கும் போக்கைக் கையாண்டிருக்காது என்பது நிச்சயம்.

பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளின் பேச்சாளர்கள் கூட இப்படிக் கருத்துத் தெரிவிக்க முன்வந்திருக்க மாட்டார்கள்.

அதற்கு ஆளும் தரப்பின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் இப்போதைய பேச்சு நல்ல உதாரணம்.

மத விவகாரங்களில் நம் மத்தியில் ஒரு பேச்சு உண்டு. இடையில் மதம் மாறியோர்தான் மத வெறியில் தீவிரமாக நிற்பர் என்பார்கள். புதிதாகச் சேர்ந்த மதத்தின் மீதான தமது அதீத விசுவாசத்தைக் காட்டுவதற்காக பிறப்பால் அந்த மதத்தை பின்பற்றுபவர்களை விட புதிதாகச் சேர்ந்தவர்கள் அதிதீவிரத்தை வெளிக் காட்டுவார்.

புலிகள் விடயத்தில் பேராசிரியர் பீரிஸ் கூறும் கருத்துக்களையும் கூட இந்தப் பின்புலத்தில்தான் நாம் பார்க்கவேண்டும் போல தோன்றுகின்றது.

"இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவது பயங்கரவாதிகளுடன் பேசுவதற்கு ஒப்பானது. ஏனெனில் இந்த அமைப்புகள்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் அவர்களுக்குத் தீனி போட்டனர்" – என்று திருவாய் மலர்ந்து இருக்கின்றார் அவர். இந்தக் கருத்தை பேராசிரியர் பீரிஸ் கூறுவதுதான் மிக வேடிக்கையானது. இதே விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் ஆறு தடவைக்கு மேல் பல்வேறு நாடுகளில் போய், அங்கு புலிகளுடன் ஒன்றாக அமர்ந்திருந்து, கைகுலுக்கிச் சாப்பிட்டு, சமரசம் பேசி, 'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி தீர்வு காண' இணங்கி, அதனை சர்வதேசத் தளத்தில் பகிரங்கமாக அறிவித்தவர் – பௌத்த, சிங்கள அரசின் சார்பில் பிரகடனப்படுத்தியவர் – இதே பேராசிரியர் பீரிஸ்தான்.

அவரோ இப்போது புலிகளுக்கு தீனி போட்டவர்களுடன் எப்படிப் பேசுவது என்று கேள்வி எழுப்புகின்றார். இது வேடிக்கையிலும் வேடிக்கை.

நாம் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டியபடி புலிகளின் ஆயுதங்கள் கனன்று கொண்டிருந்த போது தாய்லாந்திலும், ஜப்பானிலும், நோர்வேயிலும், ஜேர்மனியிலும் புலிகளுடன் சரிசமமாக அமர்ந்து இருந்து, சமரசம் பேசி, உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றி உரையாடும் அளவுக்கு இறங்கி வந்தவர், இப்போது புலிகளும் இல்லை, தமிழர்களிடம் ஆயுதங்களும் இல்லை என்றதும் அடாவடித்தனமாக பேசுகின்றார். அவ்வளவுதான். பௌத்த, சிங்களத்தின் பேரினவாத வெறித்தனத்தின் பிரதிபலிப்பே இக்கருத்துத் தெறிப்பு.

'உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும் கூட மிதிக்கும்' – என்ற நிலைமைதான் தமிழருக்கு. என்னை செய்வது?

# முறையான வேலைத்திட்டத்துடன் கூடிய உறுதியான கொள்கை அரசிடம் இல்லை

### அகிலவிராஜ் காரியவசம் சாடல்



வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டமும் உறுதியான கொள்கையும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விரக்தியடைந்திருக்கும் மக்கள் இந்த அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு நீண்டகாலம் செல்லாது என அக்கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

எனவே முறையான திட்டங்களினூடு நாட்டை கட்டியெழுப்ப மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்த்துக்கொள்ள முன்வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுகாதாரம், விவசாயம், கல்வி என அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்திருக்கின்றன என்றும் இதனை மீட்டெடுக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அகிலவிராஜ் காரியவசம் குற்றம்சாட்டினார்.

# தரமான உயர்தர திரவ நைட்ரஜன் உரத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய தீர்மானம்

### அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறுகிறார்



இந்தியாவிலிருந்து உயர்தர திரவ நைட்ரஜன் உரம் அரசாங்கம் இறக்குமதி செய்யப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

இறக்குமதி செய்யப்படவுள்ள உரங்கள் அம்பாறை மற்றும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள பிற மாவட்டங்களுக்கு மாதத்தின் இறுதிக்குள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகத்துக்கு ஏற்கனவே போதுமான அளவு உரம், இயற்கை உரம் மற்றும் பொட்டாசியம் குளோரைட் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயத்தைக் கைவிட்ட பல விவசாயிகள் நெற்செய்கைக்குத் திரும்பியுள்ளனர் என மாவட்ட விவசாய மேம்பாட்டு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டை திருத்தங்கள் இறுதியாகும்வரை இடைநிறுத்துக!

### தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் இறுதி செய்யப்படும் வரை, அதன் பயன்பாட்டை இடைநிறுத்த வேண்டும் என கலாநிதி ஜெஹான் பெரேரா தலைமையிலான தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு அச்சட்டத்தின் கீழ் எவ்வித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கை ரீதியில் முக்கிய மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றமை அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஆற்றப்பட்ட உரைகளின் மூலம் வெளிப்பட்டுள்ளது என்றும் அந்தப் பேரவை தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வை வழங்குவதற்கு மக்கள் மனங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது அவசியம் என்றும் தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் கட்சிகளும் தத்தமது நிலைப்பாடுகளிலேயே தங்கியிருப்பதைவிடுத்து, பொதுவான பிரச்சினைகளில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

# வெளிநாட்டு ஆசைகாட்டி பணம் கொள்ளை இளைஞர் மற்றும் யுவதிகள் சிக்கியுள்ளனர்

வெளிநாட்டுக்கு அனுப்புகிறோம் எனக் கூறி இலங்கை இளைஞர், யுவதிகளிடம் பணம் கொள்ளையடிக்கும் முகவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

சுற்றுலா விசா மூலம் டுபாய் நாட்டுக்கு தொழிலுக்காக இளைஞர், யுவதிகளை அனுப்புகிறோம் என வாக்குறுதியளிக்கப்பட்டு இந்த மோசடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு டுபாய் நாட்டுக்கு செல்லும் இளைஞர்கள், யுவதிகள் தொழில் வாய்ப்பு கிடைக்காமல் இடைநடுவில் சிக்கித்தவிக்கின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

டுபாயில் தொழில் பெற்றுத்தருகிறோம் என 3 லட்சம் ரூபா பெற்றுக்கொண்டு அந்த நாட்டுக்கு இளைஞர்களை அனுப்புவதற்கு ஏஜன்சி உரிமையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். எனினும் டுபாயில் அவர் கூறியமை போன்று தொழில் கிடைப்பதில்லை எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறான மோசடியில் சிக்கியவர்கள் ஏஜன்ஸியிடம் கேள்வி கேட்கும் போது உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் இந்த மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்த போது நியாயம் கிடைக்கவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



தற்போது தாங்க முடியாத அளவு அதிகரித்துள்ள விலைவாசியைக் கருத்தில் கொண்டு அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

'விலைவாசி உயர்வால் பொதுமக்கள் படும் கஷ்டங்களை அவதானிக்கும் போது அரச ஊழியர்களின் சம்பளம் குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும்.

அப்போது தான் வாழ்க்கைச் செலவுச் சுமையை ஓரளவுக்கேனும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியும்.

சமூகத்தில் கௌரவத்தோடு வாழும் அவர்கள் தங்களது அந்தஸ்தை இழக்கும் நிலையை உருவாக்கி விடாதிருக்க அரசு இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதே போல ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியத்திலும் கணிசமான அதிகரிப்புச் செய்யப்பட வேண்டும். சமுர்த்தி உள்ளிட்ட சகல அரச கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் மக்கள் கடன் இன்றி உண்ணும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். மக்களுக்காகத் தான் அரசு இருக்கின்றது.

எனவே, மக்களின் நலன் பேணும் விடயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும். அரசைக் கொண்டு நடத்த நிதி இல்லை என்பதற்காகச் சகல பொருள்களினதும் விலைவாசியைக் கண்ணை மூடிக் கொண்டு உயர்த்தி மக்களைத் துன்பத்துக்குள்ளாக்கும் நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து மக்களைப் பற்றிய எந்த அக்கறையும் இந்த அரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. காஸ் உள்ளிட்ட சில பொருள்களின் விலை 100 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் எந்த அரசும் செய்யாத ஒரு மோசமான விலை அதிகரிப்பு இதுவாகும்.

இந்த நிலையில் நாடு தான் முக்கியம் மக்கள் முக்கியமல்ல என்ற போர்வையில் சில அமைச்சர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றார்கள். மக்களைப் பற்றிய எந்த அக்கறையும் இந்த அரசுக்கு இல்லை என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

69 லட்சம் மக்கள் ஆணை கொடுத்துத் தான் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இன்று இந்த மக்கள் ஓரங்கட்டப்பட்டு விட்டார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களது நலன் பேணும் நடவடிக்கைகளே இப்போது முன்னெடுக்கப்படுகின்றன. இப்போது அரசு அபிவிருத்தியைப் பற்றிப் பேசுகின்றது. மக்களைப் பட்டினி போட்டு விட்டுச் செய்யப்படும் அபிவிருத்தி தேவையா அல்லது மக்களின் வாழ்க்கைச் செலவைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்து விட்டுச் செய்யப்படும் அபிவிருத்தி தேவையா என்பது தொடர்பாகக் கேட்க விரும்புகின்றேன். – எனக் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சிறையில் கைதிகள் துஷ்பிரயோகம்

## விசாரணைகள் தொடர்கின்றன

அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் கடந்த செப்ரெம்பரில் நடந்த சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அரசின் பராமரிப்பில் கைதிகளை இவ்வாறு துஷ்பிரயோகம் செய்வது அடிக்கடி நிகழ்கிறது என்றும் கைதிகளின் உரிமையைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது. மேலும் கைதிகளின் உரிமை மீறல்கள் தொடர்பான கடந்த கால விசாரணைகள் பக்கச்சார்பானவை என கைதிகள் உரிமைகள் பாதுகாப்பு குழுவின் தலைவர் சேனக பெரேரா குற்றம் சாட்டினார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளின் மெதுவான முன்னேற்றம் அண்மையில் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் இரண்டு கைதிகள் தாக்கப்பட காரணமாக அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் குறித்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடந்து கொண்டிருப்பதை சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன உறுதிப்படுத்தியுள்ளன.

துரதிஷ்டவசமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு சாதாரண ஆணைக்குழு என்பதால் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கைது செய்யவோ அல்லது தண்டிக்கவோ மட்டுமே பரிந்துரைக்க முடியும் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகள் உட்பட கிட்டத்தட்ட 40 பேர் விசாரிக்கப்பட்டனர் எனவும் இதன் இறுதி அறிக்கை நீதி அமைச்சிடம் ஒப்படைக்கப்படும் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சுயாதீனமாக விசாரித்து அறிக்கையை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார ரீதியில் வலுவடைந்த சமூகமாக மட்டு மக்களை மாற்ற நாம் முயற்சிக்கின்றோம்

## பூ.பிரசாந்தன் எடுத்துரைப்பு

எதிர்வரும் 2023, 2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எமது தலைவர் சந்திரகாந்தனின் தூரநோக்கு சிந்தனையில் மட்டக்களப்பு மாவட்டம் வறுமையில் முதலிடமாக இருக்கின்ற நிலைமை மாற்றப்பட்டு, மட்டக்களப்பு மக்களை பொருளாதார ரீதியில் வலுவடைந்த சமூகமாக மாற்றுவதற்கான பயணத்தில் மக்களும் கைகோர்த்துப் பயணிக்க வேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் ஆலயங்களுக்கான கொடுப்பனவு வழங்கும் பணிகள் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

'மக்களின் எதிர்கால வாழ்க்கையை வலுவாக்குவதற்காக மிக அதிகமான சேவைகளைச் செய்ய வேண்டி இருக்கின்றது. 2023 ஆம் ஆண்டளவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமையுடன் வாழ்வாதாரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமைவதற்காக வலுவான பொருளாதாரக் கட்டமைப்பை அமைத்துக் கொடுப்பதற்காக மக்களின் அடிப்படை வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக எமது தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்தும் ஆளும் அரசுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றார்.

இருந்தாலும், இரண்டு வருடங்களாகக் கொரோனா அச்சம் காரணமாக நமது நாடு மாத்திரமல்ல சர்வதேசமே பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. மக்களின் அன்றாட வாழக்கை கூட பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் ஆளும் அரசுடன் இணைந்து முடியுமான அபிவிருத்திப் பணி மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது போன்ற திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

யுத்தத்தின் கொடுமை இன்று எம் கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றை இழந்து மீண்டும் ஒரு வலுவான எதிர் காலத்தை, பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாட்டுடன் மக்கள் இருக்கின்றார்கள்.

ஆனால் இந்தச் சூழலில் அறுபது வருடங்களாக எவ்வாறு மக்களை ஏமாற்றி அரசியல் செய்தார்களோ அதே போல் மீண்டும் நாடாளுமன்றன் சென்று ஆளும் கட்சி செய்யும் வேலைகளை விமர்சித்து வருகின்றார்கள். இன்று மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கின்றார் கள். மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் மக்கள் அவையொன்று மாகாணத்தில் அமையாமல் நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படுகின்ற சூழலை உருவாக்கியது இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், நல்லாட்சி அரசும் தான்.

கடந்த மாகாணசபை கலைக்கப்பட்ட பிற்பாடு மாகாணசபையின் பதவிக் காலத்தை ஒருவருடம் எவ்வாறு நீடிக்கலாம் என்று நரித்தந்திரத்தைக் கையாண்டார்கள். அது முடியாமல் போனது. பின்பு புதிய தேர்தல் முறை என்ற அடிப்படையில் மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்காகக் கையுயர்த்தினார்கள். தற்போது நித்திரையில் இருந்து எழுந்தவர்கள் போன்றும் மாகாணசபைத் தேர்தலைப் பிற்போட்டதற்கும் தங்களுக் கும் எவ்வித சம்பந்தமும் இல்லாது போன்றும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அது மாத்திரமல்லாமல் இன்று கல்வியில் பல தேவைப்பாடுகள் எமது மக்களுக்கு இருக்கின்றது. ஏனெனில் நம்மிடம் இருக்கும் ஒரே ஓர் ஆயுதம் கல்வி மாத்திரமே. அதனை வைத்துக் கொண்டுதான் எதிர்கால சமூகத்தை வலுவாக்க வேண்டும். தற்போது கல்வியைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்குப் பொருளாதாரம் முக்கிய தேவைப்பாடாக இருக்கின்றது. எனவே இவை தொடர்பில் மக்கள் சிந்திக்க வேண்டும். எதிர்கால சமூகக் கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டும், எமது எதிர் காலத்தைத் தீர்மானிப்ப தற்கான தலைவர்களை எவ்வாறு தீர்மானிக்கப் போகின்றோம் என்கின்ற அனைத்து விடயங்களிலும் அவதானமாக இருக்க வேண்டும்.

ஆனால் இன்று பல ஊடக வீரர்கள் இருக்கின்றார்கள். எடுத்தவுடனே அவர்கள் சொல்வது இன்று பலர் மட்டக்களப்பில் மீள்குடியேற்றப்படவில்லை என்று. ஆனால் மாவட்ட செயலகத்தில் தரவுகளை எடுத்துப் பார்த்தால் 41 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேற்றப்பட வேண்டி இருக்கின்றது. அவற்றுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெறுமனே வாய் ஜாலங்களூடாக மக்களைக் குழப்பி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற அபிவிருத்திப் பணிகளைக் குழப்புவதற்கான முனைப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மக்களின் கருத்துக்களைக் கேட்காமல் நல்லாட்சி அரசால் அமைக்கப்பட்ட 3 ஆயிரம் வீடுகள் இன்று பூரணப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த வீடுகளுக்காகப் பணம் செலவழித்து மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றார்கள். ஆனால் அவ்வாறானதொரு சூழலை இந்த அரசும், அரசுடன் சேர்த்திருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் ஒருபோதும் ஏற்படுத்தாது.

அவ்வாறு முடிக்கப்படாத வீடுகள் தொடர்பிலும் எமது தலைவர் சந்திரகாந்தன் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடியிருக்கின்றார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றார். எனவே, மக்களிடம் கருத்துக் கேட்காமல் தான்தோன்றித்தனமாகச் செய்தால் இவ்வாறான நிலைமைகளே ஏற்படும்.

இன்று ஒவ்வொரு கிராமத்திற்கும் 30 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அது மக்களின் கருத்துக்களைக் கேட்டு மக்களால் சொல்லப்படும் வேலைகள் தான் செய்யப்படப் போகின்றன. ஆனால் கடந்த காலத்தில் நல்லாட்சி அரசால் கொண்டு வரப்பட்ட பல கம்பெரலிய யுத்தங்கள் தோல்வியடைந்துள்ளன. மக்களின் கருத்துக்களைக் கேட்காமல் மேற்கொள்ளப்படும் எந்த அபிவிருத்திப் பணிகளும் நிலைக்காது என்பதற்கு கடந்த ஆட்சியின் கம்பெரலிய திட்டமே உதாரணமாகும்.

எதிர்வரும் 2023, 2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எமது தலைவர் சந்திகாந்தனின் தூரநோக்கு சிந்தனையில் மட்டக்களப்பு மாவட்டம் வறுமையில் முதலிடமாக இருக்கின்ற நிலைமை மாற்றப்பட்டு, மட்டக்களப்பு மக்கள் பொருளாதார ரீதியில் வலுவடைந்த சமூகமாக மாற்றுவதற்கான பயணத்தில் மக்களும் கைகோர்த்துப் பயணிக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 164

**414. அப்படித் தூண்டப்படலாம் என்றால் முள்ளிவாய்க்காலின் கடைசி கால நேரங்களில் இது இனப்படுகொலை, மனித குலத்திற்கெதிரான அட்டூழியங்கள் என்று தெரிந்த போதும் (அது இருபகுதியினரால் என்றாலும்) மக்களுக்காக ஏன் நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை?**

அத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் பலமிருந்த நாடுகளின் புவியியல் போட்டிகளாலும், ஐ.நாவின் ஆரம்பத்திலிருந்தே அத்தகைய செயற்பாடு



காரத் எவன்ஸ்

களுக்கு விதிக்கப்பட்டிருந்த நடைமுறைக் கெடுபிடிகளாலும் அந்த முயற்சிகள் வலுவிழந்திருந்தன.

ஐ.நா. சுதந்திரமான அமைப்பாக எதிர்பார்க்கப்பட்டாலும் அப்படியான கட்டமைப்புக்கள் அது நிறுவப்பட்ட போதே ஏற்படுத்தப்படவில்லை. அதனை அமைத்த பலமிக்க நாடுகள் ஐ.நா. இயங்குவதற்கான வழிமுறைகள்,அதன் அதிகாரங்களை வரையறுத்தன.

அங்கத்துவ நாடுகளைக் கட்டுப்படுத்தி புவியியல் அரசில் செல்வாக்குச் செலுத்துபவர்கள் தங்களின் திசைகளை மீறாதவாறு ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டனர். அதில் சில நாடுகளுக்குத் தரப்பட்ட தடுப்பதிகாரமும் – வீட்டோ அதிகாரமும் – அதில் அடங்கும். அவை பாவிக்கப்பட்டன.

மத்திய கிழக்கு நாடுகளின் அல்லல்களுக்கு இடையே பலஸ்தீனியர்களுக்கு இஸ்ரேல் செய்யும் அட்டூழியங்கள் யாவும் பல ஐ.நா. தீர்மானங்களால் கண்டிக்கப்பட்டாலும் நேரடி நடவடிக்கைகள் அமெரிக்க, மேற்குலக நாடுகளின் தடுப்பதிகாரங்களால் முடக்கப்படுகின்றன.

அதுபோல் முள்ளிவாய்க்கால் காலங்களில் சில அங்கத்துவ நாடுகளின் முன்னெடுப்பினால் ஐ.நா. பாதுகாப்பு சபை அவற்றை ஆராய்ந்தாலும் சீனா, ரஷ்யா போன்றவை தங்களது தடுப்பதிகாரத்தை பாவித்ததால் முன்னேற முடியவில்லை.

மறுபக்கத்தில் சீனா, ரஷ்யா விற்கெதிரான தங்களது புவிசார் அரசியல் லாபங்களுக்காக அமெரிக்கா தனது ஆதரவு நாடுகளைக் கட்டுப்படுத்தியது.

ஸ்ரீலங்கா சாதுரியமாக, சாமத்தியமாக, “பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” என்று அதனை முடிவெடுத்து சர்வதேசத்தையும் இந்தியாவின் துணையோடு மௌனிக்க வைத்தது.


இவற்றினால் பாதுகாப்புச் சபையில் கூட அந்த நாள்களில் தீர்மானம் ஒன்று நடவடிக்கைக்காக எட்டப் படாவிட்டாலும், அதனை ஐ.நாவின் பொதுச் சபைக்கு ஒரு வழி நடத்துவதற்கு அன்றில் ஏதாவது திசைகளைச் சுட்டிக்காட்ட எனக் கோரப்பட்ட அறிக்கைக்கே பலமான ஆதரவு இருக்கவில்லை.

அரசியல் வேறுபாடுகளைக் கடந்து மக்களைப் பாதுகாப்பது என்பது ஐ.நா. பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு உரிமை **R2P** என்பது **(Right to protect)** அப்படியாக ஐ.நாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாசனம். அட்டூழியங்கள் ஒரு நாட்டில் நடந்தால் அந்த நாட்டின் மக்களைப் பாதுகாக்க ஒரு நாடோ அன்றில் நாடுகளோ சேர்ந்து அந்த நாட்டின் இறைமையில் குறுக்கிட்டு, தலையீடு செய்யலாம். அந்த நாட்டின் இறைமை என்பதைக் கணக்கெடுக்க வேண்டியதில்லை என்பது அந்த சாசனத்தின் அத்திபாரம். இதனைப் பாவித்துத்தான் அமெரிக்க ஜனாதிபதி **Bush** (புஷ்) ஈராக்கிலும், லிபியாவிலும் சில நட்பு நாடுகளுடன் உட்புகுந்தார்.

சூடான் போன்ற ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட இனப்படுகொலைகளை அண்டி இந்த அணுகுமுறை வலுப்பெற முன்னின்று உழைத்தவர்களில் அப்பொழுது ஆஸ்திரேலியாவின் வெளிவிவகார மந்திரியாக இருந்த காரத் எவன்ஸும் **(Gareth Evans)** முக்கியமானவர். போர்க்காலங்களில் அவர் சர்வதேச நெருக்கடிக் குழுவின் **(International Crisis Group)** தலைவராக இருந்தவர். தமிழ் மக்களின் உரிமை




கள் பற்றிய போராட்டத்தை நன்கு விளங்கிக் கொண்டவர். அதன் அணுகுமுறைகள் பற்றி ஆதரவும் புத்திமதிகளும் தந்தவர். போர் நிறுத்த ஒப்பந்தங்கள் முறிந்து போர் மேகங்கள் சூழ்ந்தபோது **R2P**யை நடைமுறைப்படுத்த எவ்வளவோ முயற்சிகள் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகள் மூலமும் இந்தியாவுடன் நேரடியாகவும் எடுத்தார். ஆனால் எந்த முயற்சியும் கைகூடவில்லை. விடுதலைப் புலிகளின் “வீரச்சாவை” தழுவ வேண்டும் என்ற தத்துவத்திலும், சிங்களப் பேரினவாதத்தின் உன்மத்தத்திலும், மனிதாபிமனமும் சாகடிக்கப்பட்டு தமிழ்



புஷ்

மக்கள் கணக்கெடுக்கப்படவில்லை.

இப்பொழுது சர்வதேச சூழல் வேறு. விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் முற்றுப் பெற்றதாகவே பலராலும் கருதப்படுகிறது. திரும்பவும் அப்படியான ஆயுதப்போராட்டம் விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் என இந்தியா கணக்கெடுக்கவில்லை. சர்வதேச மனித உரிமை மன்றின் முன்னால் வெளிக்கொணரப்படும் ஆதாரங்களாலும் ஸ்ரீலங்காவின் போக்குகளாலும் அங்கத்துவ நாடுகள் அதனைக் கட்டுக்குள் கொண்டு வரத் தீர்மானிக்கின்றன.

இவற்றை தமிழ் மக்கள் தங்களுக்கு சாதகமான முறையில் பயன்படுத்துவதற்குரிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்பது போல், தேர்தல் என்ற பந்தை உருட்டி விட்டவுடன் உரிமைகளை பற்றியோ, முறையான அதிகாரங்கள் கைக்கு வருகின்றனவா என்பவை பற்றி அக்கறை இல்லாமல் விளையாடக் களத்தில் குதிக்க முந்துவோரையும், ஆசைகள் ஆட்டிப்படைப் பதையும் தான் காணக் கூடியதாக இருக்கிறது.

இங்கு தான் தமிழ் மக்கள் ஆரம்பத்திலேயே கடிவாளங்கள் போடக் கடமைப்பட்டுள்ளார்கள்.

(வளரும்......)



காலைக்கதிர் Kalaikkathir

# எனது தெரிவு எப்போதும் இந்தியாவே காரணம் கூறினார் அமைச்சர் டக்ளஸ்



இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் எனது தெரிவு எப்போதும் இந்தியாவாகத்தான் இருக்கும்.

இருப்பினும் இலங்கைக்கு தற்போது ஏனைய தரப்புக்களின் உதவிகள் பெருமளவிற்குத் தேவைப்படுகின்றன. எனவே அத்தகைய உதவிகளை வழங்குவதற்கு முன்வருகின்ற தரப்பினரிடமிருந்து அவற்றைப்பெற்று நாட்டை அபிவிருத்தி செய்கின்றோம்.

அதற்கு பலவாறு உள்நோக்கம் கற்பிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. சீனாவுடனான தொடர்புகள் தொடர்பாக ஒவ்வொருவரும்பல்வேறுவிடயங்களைக் கூறலாம்.

ஆனால் அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை என்று கடற்றொழில்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தால் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'அமைச்சரிடம் கேளுங்கள்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அதில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

**கேள்வி :** அண்மையில் நாட்டுக்கு வருகைதந்த இந்திய வெளியுறவுச்செயலருடனான சந்திப்பின்போது இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் பேசினீர்களா.....?

**பதில் :** ஆம், மீனவர் பிரச்சினை தொடர்பில் பேசினேன். ஏனைய தமிழ்க்கட்சிகளில்பெரும்பாலானவை ஏற்கனவே இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் அவற்றைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்கே விரும்புகின்றன.

இருப்பினும் பிரச்சினைகளுக்குரிய தீர்வைப்பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். அந்தவகையில் இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை விவகாரத்தில் இராஜதந்திரரீதியானஅணுகுமுறையைப் பின்பற்றல், சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் இடையிலான பேச்சுகளை நடத்துதல், இந்தப் பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வை வழங்குவதில் கவனம்செலுத்தல் ஆகிய அணுகுமுறைகளையே நான் கையாண்டு வருகின்றேன்.

இது தொடர்பாகப் பாரதிய ஜனதா கட்சியின் மூத்ததலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்ரமணியன் சுவாமியிடமும் எடுத்துரைத்தேன். இந்த விவகாரத்திலே அவர் எனது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டார்.

குறிப்பாக இலங்கைக் கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையால் இருதரப்பிற்கும்எந்தவொருபயனுமில்லை என்பதை சுட்டிக்காட்டியதுடன், தீர்வை நோக்கிய பேச்சுக்கு முன்னதாக இத்தகைய செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்பதையும் அவரிடம் வலியுறுத்தினேன். இதுபற்றி அவர் மாநிலங்களவையில் பேசுகிறேன் என வாக்குறுதியளித்திருக்கின்றார்.

**கேள்வி :** இந்திய வெளியுறவுச் செயலருடன் மாகாணசபைத்தேர்தல் குறித்துப் பேசினீர்களா?

**பதில் :** இல்லை. ஏனெனில் இந்த விடயம் தொடர்பில் நான் கடந்த 30 வருடங்களுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகின்றேன். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்று நான் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றேன். தற்போது இந்திய வெளியுறவுச்செயலரும் அதனையே வலியுறுத்தியிருக்கின்றார்.

ஆனால் கடந்த காலத்தில் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவே மாட்டோம் என்று கூறியவர்கள், இப்போது அனைத்துத்தரப்புக்களினதும்தொடர்ச்சியான வலியுறுத்தலையடுத்து 13 ஆவது திருத்தத்தை தமக்கான ஒரு கவசமாகப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்றார்கள்.

**கேள்வி :** மாகாணசபை முறைமை ஓர் 'வெள்ளையானை' என்று வர்ணிக்கப்படுகின்றது. அதனை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது?

**பதில் :** அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமை மூலம் கடந்த காலங்களில் ஏனைய மாகாணங்களின் முதலமைச்சர்களாக இருந்தவர்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அந்தந்த மாகாணங்களுக்கும் மக்களுக்கும் தேவையானவற்றைச் செய்திருக்கின்றார்கள். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் அது சாத்தியப்படவில்லை என்றால், அது யாருடைய தவறு?

**கேள்வி :** இன்றைய தினத்திலிருந்து பெரும்போகச்செய்கை ஆரம்பிக்கப்படவிருப்பதாக விவசாயத்துறை அமைச்சர் அறிவித்திருக்கின்றார். இருப்பினும் வடக்கிலும் உரத்துக்கான தட்டுப்பாடு காணப்படுகின்ற நிலையில், மக்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு அரசாங்கம் எத்தகைய தீர்வை வழங்கப்போகின்றது?

**பதில் :** விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதால் உடலுக்குப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படும் என்பதால், அதன் பயன்பாட்டைக் குறைத்து சேதனப்பசளையின் பயன்பாட்டை ஊக்குவிக்கவேண்டும் என்பது ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கொள்கைகளில் ஒன்றாகும். அதனைக் கட்டம் கட்டமாக முன்னெடுப்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடபகுதியில் உரத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக நான் அறியவில்லை. ஆகவே, இது தொடர்பில் உடனடியாகக் கேட்டறிந்து, அதற்கான தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

**கேள்வி :** இலங்கையில் சீனாவின் தலையீடு அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில், அடுத்தடுத்து இந்திய உயர்மட்டப் பிரதிநிதிகளின் இலங்கைக்கான விஜயம் முக்கிய அவதானத்தைப் பெற்றிருக்கின்றது. இந்நிலையில் இந்திய வெளியுறவுச்செயலர் ஹர்ஷ் வர்தன் மற்றும் சுப்ரமணியன் சுவாமி ஆகியோருடனான சந்திப்பின்போது, இலங்கையில் சீனாவின் தலையீடு தொடர்பாக அவர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டதா?

**பதில் :** இல்லை, அதுபற்றி அவர்கள் எதுவும் கூறவில்லை. சீனாவா? இந்தியாவா? என்றால், எனது தெரிவு எப்போதும் இந்தியாவாகத்தான் இருக்கும். இருப்பினும் இலங்கைக்கு தற்போது ஏனைய தரப்புக்களின் உதவிகள் பெருமளவிற்குத் தேவைப்படுகின்றன.

ஆகவே அத்தகைய உதவிகளை வழங்குவதற்கு முன்வருகின்ற தரப்பினரிடமிருந்து அவற்றைப்பெற்று நாட்டை அபிவிருத்தி செய்கின்றோம். அதற்கு பலவாறு உள்நோக்கம் கற்பிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. சீனாவுடனான தொடர்புகள் குறித்து வெவ்வேறு தரப்பினர் பல்வேறு விடயங்களைக் கூறலாம். ஆனால் அவை அனைத்திலும் உண்மை இல்லை என்று குறிப்பிட்டார்.

# நாட்டின் பொருளாதார நெருக்கடி அடுத்த ஆண்டில் இரட்டிப்பாகலாம்!

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

தேசிய பொருளாதார முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் இயலாமையின் வெளிப்பாடுகளைத் தற்போது நாட்டில் காணக்கூடியதாக உள்ளது. இதன் தாக்கம் 2022 ஆம் ஆண்டில் இரட்டிப்பாகக் காணப்படும் என எச்சரித்துள்ளார் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. பொருளாதார சவால்களை கணிப்பிட்டு சிறப்பு திட்டம் ஒன்றை வகுக்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளதாகவும் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் விளக்கமளிக்கையில் –

உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டு தேசிய பொருளாதார சவால்களை முகாமைத்துவம் செய்யஇயலாமையின்வெளிப்பாடுகளையே இன்று நாட்டில் காண்கின்றோம். பொருளாதார முகாமைத்துவத்தில் அரசாங்கம் தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் இந்த இயலாமையைப் புரிந்து கொண்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டில் இதன் தாக்கம் இரட்டிப்பாக இருக்கும். மக்களால் வாழமுடியாதளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இதனை மேலும் நெருக்கடிக்குள் கொண்டு செல்லும் வகையில் அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமைகின்றன. எதிர்க்கட்சியும் வெறுமனே விமர்சிப்பவர்களாக உள்ளது. எனவே தற்போதைய சவால்களைக் கணிப்பிட்டு சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.



இதனைக் கூடிய விரைவில் செய்து மக்கள் மயப்படுத்தும் செயற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கவுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சாதனைகளை யாரும் மறந்து விட முடியாது. அதற்கு வரலாறு சாட்சி பகிரும். அதே போன்று விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் என பல துறை சார்ந்தவர்களும் இன்று அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்புகின்றனர். அவற்றுக்கு பதிலளிக்கவோ தீர்வை முன்வைக்கவோ முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான பரந்துபட்ட எதிர்ப்புகள்மற்றும்நாட்டில்மேலோங்கியுள்ள பொருளாதார – வாழ்வாதார அழுத்தங்களால் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.எனவே ஒன்றிணைந்து மக்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி இதற்குத் தலைமை தாங்கும் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

# பொலிஸார் மீது கத்திக்குத்து சந்தேக நபர் கைதாகினார்!

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தகவல்



கொழும்பு – முகத்துவாரம் பொலிஸ் பிரிவில் இரவு நேர கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை கத்தியால் தாக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு முகத்துவாரம் பொலிஸ் பிரிவில் எலிஹவுஸ்பார்க்பகுதியில் இரவுநேர கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சந்தேகத்துக்கிடமாக நடமாடிக் கொண்டிருந்த சந்தேகநபரொருவரை சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது மேற்படி சந்தேகநபர் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கத்தியால் தாக்கியுள்ளார்.

சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபரால் தாக்குதலுக்கு உள்ளான இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு பொலிஸாரை தாக்கிய சந்தேகநபர் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர் என்று மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர் இதற்கு முன்னரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகபர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கியமை, படுகாயமடையச் செய்தமை, கைதுசெய்த போது தப்பிச்செல்ல முயற்சித்தமை உள்ளிட்ட குற்றங்களைப் புரிந்துள்ளார். எனவே, இவருக்கு எதிராக கடுமையாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான போதைப்பொருள் வியாபாரிகள் பல சந்தர்ப்பங்களிலும் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்படுகின்றனர். அவ்வாறான சகலருக்கு எதிராகவும் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# சிறுமி மீது முல்லையில் துஷ்பிரயோக முயற்சி!

## ஆசிரியர் கைது

முல்லைத்தீவு - உடுப்புக்குளம் பகுதியில் சிறுமி ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முயற்சித்த குற்றச்சாட்டில் வயோதிபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெல்லியடியைச் சேர்ந்த 72 அகவையுடைய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவு, உடுப்புக்குளம் பகுதியில் உறவினர்களின் வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், அருகில் உள்ள மாணவி ஒருவருக்கு பாடம் சொல்லிக்கொடுக்கிறேன் எனக் கூறி அவர் வசித்த வீட்டுக்கு அழைத்துசிறுமிமீதுபாலியல்துஷ்பிரயோகத்திற்குமுயற்சித்தமை உறவினர்களால் கண்டறியப்பட்டு பொலி ஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த வயோதிபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவு, வட்டுவாகல்பகுதியில்பெண் ஒருவரின் மூன்றாவது கணவனால் இரண்டு பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி – டிஜிற்றல் மயமாக்கல் துறைகளில் கூட்டுறவுத்துறை

ஒக்ரோபர் 14 ஆம் திகதி அன்று கொழும்பிலுள்ள மலேசிய உயர்ஸ்தானிகர் டான் யாங் தாய், வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை மரியாதை நிமித்தமாக வெளிநாட்டமைச்சில் சந்தித்தார்.

இலங்கைக்கும்மலேசியாவிற்கும்இடையிலான நெருங்கிய மற்றும் நட்புடனான இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்த வெளிநாட்டமைச்சரும் உயர்ஸ்தானிகரும், கொவிட்-19 இற்குப் பிந்திய காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுறவை மேலும் விரிவாக்குவதற்கான வழிவகைகள் பற்றிக் கலந்தாலோசித்தனர்.

1957 இல் மலேசியா சுதந்திரம் பெற்றமையை முதன் முதலாக ஏற்றுக்கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை இருந்ததையும், 2017 இல் இரு நாடுகளுக்கும் இடையிலான 60 ஆவது இராஜதந்திர உறவுகளின் ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களையும் பற்றிக் குறிப்பிட்ட உயர்ஸ்தானிகர், விமான இணைப்புகளை முழு அளவில் புதுப்பித்தல் மற்றும் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான வலுவான ஊடாடல்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கூட்டுப்பங்காண்மைகளை மீள அமைப்பதற்கான தனது வலுவான ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

வெளிநாட்டமைச்சர் பீரிஸ், இரு நாடுகளுக்கும் நன்மைகளைத் தரக்கூடிய துறைகளில் மேற்கொண்டு ஒருங்கிணைப்புக்களைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையை வலியுறுத்தி, இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இருதரப்பு கூட்டுப்பங்காண்மையையும் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

டிஜிற்றல் மயமாக்கல் துறையில் மலேசியாவில் பாரிய முன்னேற்றம் தொடர்பாக அமைச்சர் பீரிஸ் வெகுவாகப் பாராட்டினார். அரச துறையில் நிர்வாகம், நீதிமன்ற வழக்குகள், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரதான துறைகளில் வேகமான முன்னேற்றத்தை அடைவதற்குரிய ஒரு பகுதியாக டிஜிற்றல் மயமாக்கலை அவர் இனங்காட்டினார். இத்துறையின் மீதான மலேசியாவின் அனுபவங்களை அறிந்துகொள்ளும் இலங்கையின் விருப்பத்தை வெளிப்படுத்திய அமைச்சர், இந்நாட்டின் தேவைகளுக்கேற்ப அதிலுள்ள சில அம்சங்களைத் தழுவிக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது மலேசிய பல்கலைக்கழகங்கள் தமது மாணவர்கள் வெளிநாட்டுக்குப் புலம்பெயராமலேயே உயர்கல்வியைத் தொடரும் வண்ணம் புகழ்பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் ஒருங்கிணைந்து பல்வேறு கற்கை நெறிகளை வழங்கும் மலேசியாவின் கல்வி முறையை அமைச்சர் பீரிஸ் பாராட்டினார். இலங்கையின் உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வியில் போதுமான உட்கட்டுமானங்கள் இல்லாமையைக் கோடிட்டுக் காட்டிய அமைச்சர் பீரிஸ், தொழிற்பயிற்சியின் விரிவாக்கம், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுறவில் மேம்பாட்டை எட்டக்கூடிய துறையாக அடையாளம் காட்டினார்.

இந்தச் சந்திப்பில், வெளிநாட்டமைச்சு மற்றும் கொழும்பிலுள்ள மலேசிய உயர்ஸ்தானிகரகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கொவிட் காலத்தில் நல்லூரானை வழிபடுவதற்கு சிறப்பு ஏற்பாடுகள்!

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வாசலில் பக்தர்கள் வழிபாடு செய்வதற்கான சிறப்பு ஏற்பாட்டை ஆலயத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக ஆலயத்தினுள் பக்தர்கள் உட்செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய ஆலயத்துக்கு முன்பாக உள்ள வில்லு மண்டப வாயில் முகப்பில் பலிபீடம் மற்றும் மயில் என்பன வைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் முருகனை வழிபட்டு, பலிபீடத்தை தொட்டு வணங்கி, மலர் தூவி வழிபடக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி கதையாடல் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 06 நிகழ்வு ஐப்பசி மாதம் 18,19,20,21 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இன்று (திங்கட்கிழமை) வாசுகி வாகை (நோர்வே) மண்சுமந்தமேனியர்நாடகமும்இசையும், நாளை(செவ்வாய்க்கிழமை) திருமறைக்கலாமன்றம் பிரதி இயக்குநர் யோ.ஜோன்சன் ராஜ்குமார் (இலங்கை) கூத்துருவ நாடகங்கள் படைப்பாக்க அனுபவங்கள் 20.10.2021 புதன்கிழமை இரா.சிலம்பரசன் (தமிழ்நாடு, இந்தியா) தமிழகத்தில் தெருக்கூத்து நிகழ்த்துமுறைகளும் சடங்குகளும், 21.10.2021 நாடகக் கலைஞர் மு.காளிதாஸ் (இலங்கை) தமிழர் நாடக அரங்கின் சமகாலப் போக்குகள் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளனர் .

ஏற்புரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச்சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 52 பேர் கைது!

இலங்கையில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 52 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக 2020 ஒக்ரோபர் 30 முதல் இது வரையான காலப்பகுதியில் மொத்தம் 80 ஆயிரத்து 981 நபர்கள் கைதுசெய் யப்பட்டுள்ளனர் எனத் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 உள்நுழையும் மற்றும் வெளியேறும் சோதனைச் சாவடிகளில் சனிக்கிழமை மொத்தமாக 2 ஆயிரத்து 762 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் உரிய காரணமின்றி மாகாண எல்லைகளைக் கடக்க முயன்ற 326 வாகனங்களில் பயணித்த 783 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடுவதற்கான காலம் இதுவல்ல

## மக்களுக்கு எச்சரிக்கை

அத்தியாவசியமற்ற பயணங்களை குறைந்தபட்சம் டிசெம்பர் மாத இறுதி வரை கட்டுப்படுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன கேட்டுக்கொண்டுள்ளார்.

அன்றாடம் சுமார் 700 கொரோனா நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் எனவும் எனவே இதுபோன்ற சூழ்நிலைகளில், அத்தியாவசியமற்ற பயணங்கள் தடை செய்யப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் உறவினர்களைப் பார்ப்பதற்கோ அல்லது சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடுவதற்கான காலம் இதுவல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியள்ளார்.

# புதிய பிறழ்வு எந்த நேரத்திலும் நாட்டுக்குள் உள் நுழையலாம்!

## அசேல குணவர்தன எச்சரிக்கை



நாட்டிற்குள் எப்போதுவேண்டுமானாலும் புதிய கொரோனா பிறழ்வு நுழையலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு திறக்கப்பட்டுள்ள அதே வேளை துறைமுகங்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளதால் புதியமாறுபாடுகள் நாட்டுக்குள் பரவி கணிக்க இயலாத தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

எனவே முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தாலும் பொது மக்கள் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை அவசியம் பின்பற்ற வேண்டும் என்றும் வைத்தியர் அசேல குணவர்தன கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையில், மொத்த மக்கள்தொகையில் 67 சதவிகிதமானோர் முதலாவது தடுப்பூசியையும் 58 சதவிகிதமானோர் முழுமையாகவும் தடுப்பூசியை செலுத்தியுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இருப்பினும் திருப்திகரமான நிலையை அடைய வேண்டுமானால், மொத்த மக்கள் தொகையில் 70 முதல் 80 சதவிகிதமானவர்கள் தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அசேல குணவர்தன சுட்டிக்காட்டினார்.

# பொலிஸாருக்கு எதிரான குற்றப்பத்திரிகை 6 மாதத்துக்குள் முடிக்காவிடில் ரத்தாகும்

## சரத் வீரசேகர சொல்கிறார்

பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளை ஆறு மாத காலத்துக்குள் முடிக்கத் தவறினால் அது ரத்து செய்யப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தங்கள் கடமையைச் செய்ததற்காக பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் அத்தகையவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசிய அமைச்சர் சரத் வீரசேகர , பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளன எனவும் சுட்டிக்காட்டினார்.

ஆகவே இந்த விடயத்தில் தீர்வை காண அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் இணைந்து ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

இதேவேளை பொலிஸாரால் சித்திரவதைகளை அனுபவித்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பதிலாக குற்றச்சாட்டை எதிர்கொண்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற அமைச்சரின் கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

42




### மெய்நிகர் கல்விக்கு டிஜிற்றல் தொழில் நுட்பங்கள் முதுகெலும்பு

மெய்நிகர் கல்வியில் தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பங்கள் அடிப்படையானவையென்று பார்த்திருக்கிறோம். டிஜிற்றல் தொழில்நுட்பத்தை கல்விப்புலத்தின் பல்வேறு தரப்பினருக்கும் விரைவாக வழங்குவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். புதிய டிஜிற்றல் தொழில்நுட்பங்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் தமது கற்றல் செயல்முறையை இன்னும் விரிவாகக் கற்றுக்கொள்வதில் துணைநிற்கின்றன. இவற்றால் அவர்கள் புதிய மற்றும் புதுமையான கல்விப்புலத்தில் தம்மை மேம்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு என்ன வழிகள் உள்ளன?

உலக வங்கி குழு (World Bank Group) வளரும் நாடுகளில் கல்வியின் மிகப்பெரிய நிதியாளராக உள்ளது, அனைவருக்கும் தரமான கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை வழங்க 80 க்கும் மேற்பட்ட நாடுகளின் கல்வி திட்டங்களில் உலக வங்கிக் குழு பணியாற்றுகிறது.

அதாவது இந்தக் குழு (WBG) உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதே வேளை சரியான நேரத்தில் ஆராய்ச்சி, மற்றும் கல்வி முறைகளில் பயனுள்ள, பொருத்தமான தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் (ICTs) பற்றிய அறிவு பகிர்வு நடவடிக்கைகளை ஆதரிக்க உதவுகிறது -இதற்காக EdTech திட்டத்தை அறிமுகம் செய்து செயற்படுத்தி வருகின்றது. அதாவது கற்றலை வலுப்படுத்தல் வறுமைக்குறைப்புக்கு வழிவகுக்கும் என்றவகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

உலகில் பலகோடி பிள்ளைகள் இன்றும் வறுமை கற்றல் நிலையில் இருக்கும் போது மெய்நிகர் வெளி கற்றலைப்பற்றி சிந்திப்பது அபத்தமானதாகத் தோன்றுவதால், அதாவது ஆரம்பப்பாடசாலை முடிவில் 10 வயது சிறுவன் ஒரு எளிய கதையைப் படித்து புரிந்து கொள்ள முடியாத நிலையை அளவிடுவதன் மூலம் உலக வங்கி வறுமை கற்றல் அளவை உலகளவில் மதிப்பிடுகிறது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் கற்றல் வறுமை 53% ஆக உள்ளது, அதே நேரத்தில் ஏழை நாடுகளில் இது சராசரியாக 80% ஆகும். கொரோனா வைரஸ் நோய் (கொவிட் -19) பரவியதால், 180 நாடுகள் தற்காலிகப் பள்ளி மூடலை கட்டாயமாக்கியது, 1.6 பில்லியன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பாடசாலையை விட்டு வெளியேறியதனால், உலகம் முழுவதும் சுமார் 85% சிறுவர்கள் பாதிப்படைந்தனர். பெரும்பாலான நாடுகள் பாடசாலைகளை மீண்டும் திறப்பதை நோக்கி வேலை செய்யும் போது, இன்னும் இடைப்பட்ட மூடல்கள் மற்றும் கலப்பின



கற்றல் நீடிக்கின்றன.

கொவிட் ஏற்படுத்திய சுழல் பாடசாலைகளுக்கு வெளியே மாணவர்களுக்கு கல்வியை வழங்க மெய்நிகர் வகுப்பறைகளை நாடவைத்தது. இதற்கு தொழில்நுட்பம் முக்கியம் என்ற நிலை உருவானது. ஆனால் பாராட்டுக்குரிய வகையில், அனைத்து நாடுகளும் தொலைதூர கற்றல் தொழில்நுட்பங்களை டிவி, வானொலி, இணையவழி மற்றும் மொபைல் தளங்களைப் பயன்படுத்தி கற்றலை ஆரம்பித்தன.

இருப்பினும், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள பெரும்பாலான சிறுவர்கள் தொலைதூரக் கல்வியில் பங்கேற்கவில்லை என்று தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. யுனெஸ்கோ - யுனிசெவ் - உலக வங்கி கணக்கெடுப்பில் 50% சிறுவர்களிற்கு மெய்நிகர் வகுப்பறை அடையப்படவில்லை என்று தெரிவித்தனர். பாடசாலை மூடல்கள் மற்றும் தொலைநிலைக் கற்றலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் என்பன இந்த நிலையை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த தகவல்கள் டிஜிற்றல் அணுகலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றன. மற்றும் வழக்கம் போல் வணிகம் அனைத்துக்கும் தீர்வாக அமையாது என்பதும் திண்ணம். உலகெங்குமுள்ள சிறுவர்களுக்கும் மெய்நிகர் வகுப்பறை மூலம் கல்வியை வழங்குவதற்கு வேலை செய்ய முதலில் கல்வியில் உள்ள டிஜிற்றல் ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். கற்றலை விரைவுபடுத்துவதற்கும், கற்றல் வறுமையைக் குறைப்பதற்கும், திறன்களை வளர்ப்பதற்கும் தொழில்நுட்பத்தின் சக்தியை மேம்படுத்துவதற்கும், அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதற்காக பலதளங்களில் பணியாற்ற வேண்டியுள்ளது என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

டிஜிற்றல் உள்கட்டமைப்பு (இணைப்பு, சாதனங்கள் மற்றும் மென்பொருள்) மேம்படுத்துதல்.

மனித உள்கட்டமைப்பு (ஆசிரியர் திறன், மாணவர் திறன்கள் மற்றும் பெற்றோரின் ஆதரவு) மேம்படுத்த வேண்டும்.

தொழில்நுட்பக் கட்டமைப்பை நிலைநிறுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் தளவாட மற்றும் நிர்வாக அமைப்புகள் மேபடுத்தப்பட வேண்டும்.

அதாவது, கல்வி அமைப்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்தப் பின்னணியில்தான் முக்கிய பல விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

1. கலப்பின கற்றல் அமைப்புக்களை வலுப்படுத்துதல். மலிவான இணைய இணைப்பு, சாதன வசதிகளை மேம்படுத்துதல். மற்றும் கல்விக்கான பல்வகை விநியோகப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதை அடையாளம் காணுதல் அவசியமாகும்.

2. தகவமைப்பு கற்றல் அமைப்புகள், தொலைதூர மதிப்பீடு மற்றும் கல்வியை தனிப்பயனாக்க கல்வி அமைப்புகள் எவ்வாறு திறம்பட கற்றல் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தலாம் என்பதை உலக வங்கி ஆழப்படுத்தி வருகிறது. இந்த வேலையின் பெரும் பகுதி தரவை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதை ஆதரிப்பதற்காக கல்வி மேலாண்மை தகவல் அமைப்புகளுக்கான புதிய மூலோபாயத்தை உருவாக்குவதாகும்.

3. ஆசிரியர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக நாடுகளை ஆதரிப்பதற்காக ஆசிரியர் தகுதி கட்டமைப்புகள், ஆசிரியர் நெட்வொர்க்குகள் மற்றும் புதுமையான ஆசிரியர்களின் சமூகங்களை உலக வங்கி ஆராய்கிறது. குறிப்பாக தொழில்நுட்பம் நிறைந்த சூழலில் கூட ஆசிரியர்கள் கற்றலுக்கு மையமாக உள்ளனர். ஆசிரியர்களைத் தவிர்ப்பது மற்றும் தொழில்நுட்பத்துடன் அவர்களை ஈடுபடுத்தாதது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்திற்கு வழிவகுக்காது என்பதற்கான ஆதாரங்கள் வளர்ந்து வருகின்றன.

4. மெய்நிகர் கல்வியில் ஆசிரியர் திறன், ஊக்கத்தொகை, பாடத்திட்டத்துடன் தொடர்புடைய பொருத்தமான டிஜிற்றல் கற்றல் வளங்கள், மதிப்பீடுகள் ஆகிய வற்றைக் கணக்கிடுவதற்கு டிஜிற்றல் கொள்கைகள் முழுமையானதாக வகுக்கப்பட வேண்டும். அதன் மையத்தில் கல்வி என்பது மனிதனை மையமாகக் கொண்ட சமூக தீவிர முயற்சி. இந்த இலக்குகளுக்கு தொழில்நுட்பம் ஒரு வழிமுறையாகும்.

5. கல்வியின் சாத்தியமான இறுதிப் பயனர்கள் உண்மையில் மாணவர்கள் தான், ஆசிரியர்கள், நிர்வாகிகள், பெற்றோர்கள், போன்றோர் அவர்கள் மீதான அக்கறையுடன் தொடர்புபடுகின்றனர். தொழில்நுட்ப மாற்றத்தின் விளைவாக ஆசிரியர்கள் புதிய, பெரும்பாலும் அதிநவீன கடமைகள் மற்றும் பொறுப்புகளை ஏற்கும் போது, ஆசிரியர்கள் தற்போது செய்யும் சிலவற்றை தொழில்நுட்பம் செய்ய வேண்டியிருக்கும்.

6. கல்வி அமைப்புகள் மாணவர்களின் கற்றலை ஆதரிக்க மிகவும் புதுமையான யோசனைகளை இணைத்துக்கொள்ள வேண்டும். அதாவது,. சிறந்த உள்ளடக்கம், மென்பொருள், அப்ளிகேசன்கள், மற்றும் மகிழ்வூட்டல் போன்றவற்றைச் சிந்திக்க வேண்டும்

7. கல்வி அமைப்புக்கள் தங்கள் நாட்டில் படைப்பாளர்களைக் கண்டுபிடிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் தக்கவைத்துக்கொள்வதற்கான வழிகளை தீவிரமாக அடையாளம் காண வேண்டும்.

8. விளைவுகளை அளவிட, மாணவர்களின் செயல்திறனை கண்காணிக்க, நிர்வகிக்க, புத்தகம் விநியோகத்தை நிர்வகிக்க, ஆசிரியர் ஆள்சேர்ப்பை நிர்வகிக்க, கல்வி முறை செலவினங்களை கண்காணிக்க தொழில்நுட்பம் தற்போது கிடைக்கிறது, இவை இல்லாமல், பாடசாலைகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை மேம்படுத்துவதில் நாடுகள் அவ்வளவு திறமையாக இருக்காது.

எதிர்காலத்தில் கல்வி மெய்நிகர் வகுப்பறைகளையும் நிகர்நிலை வகுப்பறைகளையும் கொண்ட ஒரு கலப்பு பொறிமுறையைக் கொண்டே நகரவேண்டியிருக்கும். இதற்கான மனிதவள மேம்பாடு மற்றும் கட்டமைப்பு மேம்பாடுபற்றி தீவிரமாகவும் வேகமாகவும் சிந்திக்கின்ற போது மெய்நிகர் கல்வியின் உச்சப்பயனைப் பெறமுடியும்.

(வளரும்...)



# விடுதலைப் புலிகளுக்குத் தீனிபோட்ட அமைப்புக்களுடன் எப்படிப் பேசுவது?



## இப்படிக் கேள்வி எழுப்புகின்றார் பீரிஸ்

இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களு டன் பேசுவது பயங்கரவாதிகளுடன் பேசுவதற்குஒப்பானது.ஏனெனில்,இந்தஅமைப்புக்கள்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் அவர்களுக்குத் தீனி போட்டன.

-இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அண்மையில், ஐ.நா. பொதுச்செய லரை சந்தித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் பிரச்சினைகள் உள்நாட்டு பொறிமுறையின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்றும், புலம் பெயர் தமிழர்களுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறேன் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் இலங்கை அரசு தடை செய்த பட்டியலில் உள்ள அமைப்புக்களுடன் பேச்சு நடத் தப்படமாட்டாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கான காரணம் என்னவென்று பீரிஸிடம் ஊடகங்கள் வினவியபோது,

உலகத்தமிழர் பேரவை, பிரிட்டிஷ் தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங் கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனேடிய தமிழ் தேசிய சபை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலகத் தமிழ் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவை பாதுகாப்பு அமைச்சகத் தால் தடை செய்யப்பட்ட அமைப்புக்களா கும்.

இந்த அமைப்புக்கள் தடை செய்யப்பட்டநபர்களுடன் அரசு பேச்சு நடத்தாது. அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் நிதியுதவி வழங்கிய வர்கள். இப்போதும் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க முயற்சிப்பவர்கள். அவர்களுடன் பேசுவது பயங்கரவாதி களுடன் பேசுவதற்கு ஒப்பானது.

இலங்கையின் அபிவிருத்தியில் முன்னேற்றத்தில் பங்காளியாக செயற்பட விரும்பும் புலம்பெயர் தமிழ் அமைப் புக்களும் இருக்கின்றன. அவர்களுடன் நாம் பேச்சு நடத்துவோம் – என்று அவர் பதிலளித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் அறி விப்பை வரவேற்றிருந்த தடை செய்யப் பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள், சர்வதேச மத்தியஸ்துடன் பேச்சு நடத்தத் தயார் என்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அசமந்தப்போக்கில் மீன்பிடி அமைச்சர்!

## டக்ளஸை வெளுத்து வாங்கிய சாணக்கியன்




இலங்கை அரசின் மீன்பிடி அமைச்சரான டக்ளஸ் தேவா னந்தா, இலங்கை சட்டத்திட்டங்களை முறையாக அமுல் படுத்தாத காரணத்தால், வடக்கு – கிழக்கில் வாழும் மீனவர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக் கோரி முல்லைத்தீவு – பருத்தித்துறை வரை நேற்று முன் னெடுக் கப்பட்ட கடல்வழிப் போராட்டத் தின் போதே அவர் இந்தக் கருத்தை முன் வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்ததாவது:-

இந்தப் போராட்டமானது இந்தியா மற் றும் தமிழ்நாடு அரசுக்கு எதிரான போராட்டமோ அல்லது இந்திய மீனவர் களுக்கு எதிரான போராட்டமோ அல்ல.

தமிழ்நாடு மீனவர்களில் ஒருசிலர் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிநடவடிக்கைகளில்ஈடுபடுவதை, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்த்தும் பாராது செயற்ப டுவதற்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அமைச்சரின் இந்த அசமந்தச் செயற்பாடானது தமிழ் நாடு மற்றும் வடக்கு – கிழக்கு வாழ் மீனவர்களுக் கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத் தும். இதனால் தமிழ்நாட்டு மக்களுக் கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையிலான நல்லுறவு பாதிக்கப்ப டும்.

எனவே, மீன்பிடித்துறை அமைச்சர் வடக்கு – கிழக்கு மக்களின் வாழ்வாதா ரத்தை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும் – என்றார்.

# மஹிந்தானந்தவின் கொடும்பாவி எரிப்பு

## நுவரெலியாவிலும் போராட்டம்



உரத் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரி வித்து, விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கொடும் பாவியை எரித்து நுவ ரெலியா வில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

நுவரெலியா மாவட்ட பயிர்ச்செய்கை யாளர்கள் இன்று நுவரெலியா நகரத்தில் பிரதான வீதியில் பேரணியாக சென்று தமது போராட்டத்தை நடத்தினர். இந்தப் போராட்டத்தில் பெருந்திரளான விவசாயி கள் கலந்துகொண்டனர்.

பேரணியில் ஈடுபட்டவர்கள் பதாதை களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப் பியவாறு சென்றனர். பின்னர் தபால் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்தனர்.

உரத் தட்டுப்பாட்டால் விவசாயம் கடு மையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, உரத்தை விரைவில் பெற்றுக்கொடுக்க வேண்டும். உரத்தை இல்லாது செய்து, விவசாயத்தை அழிக்க வேண்டாம். கொரோனா பரவலுக்கு மத்தியில் பொரு ளாதார ரீதியில் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம் என்று போராட் டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்களும் கடைகளை மூடி ஆதரவு வழங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

### மஹிந்தானந்தவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப் பில் கலந்துக்கொண்டு இதனைத் தெரி வித்துள்ளார்.

உரம் வழங்கல் தொடர்பில் அரசால் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

இந்தப் பிரச்சினை இவ்வாறு நீடிக் கப்பட்டால் அது உற்பத்திகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, அடுத்த வாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் கூடி விவசாய அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

